IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No. 494/2008

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 01.20 PM.

வா.சா. 1 சாட்சி சக்கரையம்மாள் க.பெ.தனுஷ்கோடி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 14.08.2025 in accordance with the provisions of Act XX141.**

1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவா சொத்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1, 2 வாதிகளின் டிரஸ்ட் என்ற அடிப்படையில் 3 முதல் 12 வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 3 முதல் 12 வாதிகள் தற்போது டிரஸ்டிகளாக இல்லை என்றால் சரிதான். அவர்கள் எப்போது இருந்து டிரஸ்டிகளாக இல்லை என்பதற்கான உத்தரவு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது.

2. மேற்படி உத்தரவை தாக்கல் செய்தால்தான் 3 முதல் 12 வாதிகள் டிரஸ்டிகளா இருந்தனர் என்றும் அவர்கள் பின்னர் நீக்கம் செய்யப்பட்டனர் என்பது தெரியவரும் என்றால் சரிதான். எந்த காலத்திலும் 1, 2 வாதிகள் கோவிலுக்கு 3 முதல் 12 வாதிகள் சம்பந்தப்பட்ட நபர்களாக எப்போதும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

3. எங்கள் அலுவலகத்தில் எந்தெந்த கோவில்கள் எங்களது கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதற்கும் அந்த கோவில் சொத்துக்கள்

எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதற்கும் பதிவேடுகள் உள்ளது என்றால் சரிதான். 1, 2 வாதிகள் கோவில் சம்பந்தப்பட்ட தாவா சொத்துக்கள் சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ. 3 வரையான ஆவணங்களில் தாவா சொத்துக்கள் 1, 2 வாதிகள் பெயரில் உள்ளதாக உள்ளது என்றாலும் அதில் அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் குறிப்பாக 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. 1, 2 வாதிகள் கோவிலுக்கு ஆதியில் முத்துக்கருப்பவேளாலர் என்பவர் பரம்பரை பூசாரியாக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு பின் அவரது வாரிசுகள் பூசாரிதனம் செய்து வந்திருக்கிறார்கள் என்றால் தெரியாது. பூசாரிதனம் சம்பந்தமாக அசல் மனு எங்களது அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவில் என்ன முடிவு ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது.

6. கோவிலின் சொத்துக்களின் நிர்வாகம் அனைத்தும் பொதுவாக பரம்பரை பூசாரிகளிடம்தான் இருக்கும் என்றால் சரியல்ல. நிர்வாகிகளிடம்தான் இருக்கும். ஆரம்ப காலத்தில் நிர்வாகிகள் யார் என்றால் யார் என்று தெரியாது. எங்களின் கட்டுப்பாட்டிற்கு வருவதற்கு முன்பு சொத்துக்கள் யாரிடம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு அவர்கள் பார்த்த கோவில்

ஊழியத்திற்காக தனித்த சொத்துக்களாக இனாம் செட்டில்மெண்டு தாசில்தாரால் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

7. வழக்கு சொத்து சம்பந்தமாக செட்டில்மெண்டு தாசில்தார் அலுவலகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், தற்போது அது நீக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவுகள் மற்றும் நடவடிக்கை சம்பந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் அடிப்படையில்தான் வா.சா.ஆ. 1 முதல் 3 வரையிலான ஆவணங்களை பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ. 1 முதல் 3 வரையிலான ஆவணங்களின் உண்மைத்தன்மை செட்டில்மெண்டு தாசில்தாரின் நடவடிக்கைகளை பார்த்தால்தான் தெரியவரும் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1 முதல் 7 வரை பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அறநிலையத்துறை பெயரில் உள்ளதை காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. வழக்கின் கோரிக்கையானது நில ஆர்ஜித தொகையை 1, 2 வாதிகள் கோவில் பெயருக்கு வழங்கவேண்டும் என்பதுதான் என்றால் சரிதான். அதைத்தான் நான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றாலும் அவசியமில்லை என்றாலும் சரிதான்.

10. 1 முதல் 12 வாதிகள் தாக்கல் செய்த பிராதுக்கு விரோதமாக நான் அசல் வழக்கை மேல் நடத்துவது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நில ஆர்ஜித தொகையானது யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது, எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்று எனது பிராதில் சொல்லப்படவில்லை என்றால் எவ்வளவு நிலம் என்று குறிப்பிட்டுள்ளோம், எவ்வளவு தொகை என்று தெரியாது.

11. நில ஆர்ஜித தொகை பெறுவது சம்பந்தமாக 28, 29 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் அனுப்பவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு கொடுத்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்புதான் 2008 ல் எங்களது துறையின் கட்டுப்பாட்டில் கோவில் வந்தது.

12. 2008ம் வருடத்தில்தான் 3 முதல் 12 வாதிகள் 1, 2 வாதிகள் கோவிலுக்கு அறங்காவலர்கள் என்று டிரஸ் ஆவணத்தை ஏற்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 3 முதல் 12 வாதிகளை மேற்கொண்டு சாட்சிகளாக விசாரிக்க உள்ளேனா என்றால் தேவையில்லை. 1 முதல் 12 வாதிகள் தாக்கல் செய்த பிராது சங்கதிகள் நான் சொல்வதற்கு எதிர்விதமாக உள்ளது என்றால் சரியல்ல. அப்படிப்பட்ட நிலையில் 3 முதல் 12 வாதிகளை நீக்கரவு செய்யாமல் சட்டப்படி நடத்துவது என்றால் சரியல்ல.

13. தாவா சொத்து தனித்து பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.45 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.14 11:03:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.